# "திடன்கொள், எழுந்திரு, இயேசு உன்னை அழைக்கிறார்"
# "Be of good Cheer, Rise, Jesus is calling you"

*By Prof. C. Peter Chandran, Ph.D.,*

**"பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.**

**அவன் நசரேயனாகிய இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டு இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ : தாவீதின் குமாரனே இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனை அழைத்துவரச் சொன்னார்.**

**அவர்கள் அந்தக் குருடனை அழைத்து : திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள். உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து இயேசுவினிடத்தில் வந்தான்.**

**இயேசு அவனை நோக்கி : நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன் : ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி : நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின் சென்றான்" (மாற்கு 10 : 46–52).**

## 1. முன்னுரை : (Introduction)

எரிகோ பட்டணத்தில் சுமார் 1,00,000 மக்கள் அந்நாட்களில் வாழ்ந்தார்கள். ஐந்து பேர்களில் ஒருவருக்கு கண் சம்மந்தமான வியாதி அல்லது குருட்டுத்தன்மை இருந்தன. இறை மகன் இயேசு, குருடர்களுக்கு பார்வை தரும்படி அவ்வூருக்கு சென்றார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார்.

**Jesus heals a Blind Man**



## 2. பர்திமேயு என்கிற ஒரு குருடன் : (Blind Bartimaeus)

பர்திமேயு என்கிற ஒரு குருடன் எரிகோ என்கிற பட்டணத்தில் வாழ்ந்து வந்தான். தமிழில் இவனுடைய பெயரில் 5 எழுத்துகள் உள்ளன. ஆங்கிலத்தில் 10 எழுத்துகள் உள்ளன. பர்திமேயு என்ற பெயருக்கு திமேயுவின் மகன் என்று அர்த்தம். திமேயு என்றால் ஒருவரை கனப்படுத்து என்று அர்த்தம். திமேயு மற்றும் தீமோத்தேயு என்ற பெயர்கள் ஒன்று போல இருக்கின்றன. திமேயு என்பது ஒரு கிரேக்க பெயர்.

பர்திமேயு என்கிற குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்தான். பிச்சை கேட்கிறவர்கள் குறிப்பாக இந்தியாவில் அதிகம் இருக்கிறார்கள். குருடர்களுக்கு பார்வை தரும்படி இயேசுவானவர் உலகத்தின் ஒளியாக, எந்த மனுஷனையும் பிரகாசிக்கிற மெய்யான ஒளியாக இருக்கிறார். இயேசு சொன்னார் : **"கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்,**

**சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" (லூக்கா *4:18,19*).**

## 3. இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் : (Jesus, thou Son of David, have mercy on me)

"இயேசு வருகிறார்" (Jesus is coming) என்று மக்கள் எல்லோரும் சொன்னார்கள், பர்திமேயு, தன் காதுகளினாலே இந்த நல்ல செய்தியை கேட்டான், உணர்ந்தான். அவனுக்குள்ளே நம்பிக்கை வந்தது. அவன் அவரை நோக்கி கூப்பிட ஜெபிக்க தொடங்கினான். "இயேசுவே, தேவனுடைய குமாரனே, எனக்கு இரங்கும்". ஒரு அருமையான ஐந்து வார்த்தைகள் ஜெபம். ஜெபித்தால், அற்புதம் சம்பவிக்கும்.

**கர்த்தர் சொன்னார் : "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" (எரேமியா *33:3*).**

பர்திமேயு கர்த்தரை நோக்கி கூப்பிடத் தொடங்கினான். அதிகமாய் கூப்பிட்டான். அவரிடமிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. ஆண்டவர் இயேசு, அவனை அழைத்து வரச் சொன்னார். கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் உள்ளவர். பர்திமேயு, இறைமகனின் இரக்கத்திற்காக மன்றாடினான்.

## 4. திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் : (Be of Good Comfort, Rise; He calls you)

அவர்கள் அவனை உற்சாகப் படுத்தினார்கள். திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்று நான்கு அழகான வார்த்தைகளைப் பேசினார்கள். உடனே, அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, இயேசுவிடம் வந்தான். அவன் வாழ்க்கை மாறப்போகிறது!

பிச்சைக்காரன் ஒருவன், ஒரு கோப்பை நிறைய பல பென்சில்களை வைத்துக்கொண்டு, சென்னை எழும்பூர் இரயில் நிலையத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஒரு இளம் அதிகாரி, அவனை கடந்து சென்றபோது, பரிதாபப்பட்டு, அவனுடைய கோப்பையில் ஒரு பத்து ரூபாய் நாணயத்தை போட்டு, பென்சில்கள் எதுவும் எடுக்காமல் சென்றான். சென்னை

மெட்ரோ இரயிலுக்குள் பிரவேசிக்க சென்று கொண்டிருந்தான். இரயில் கதவு மூடுவதற்கு முன்பாக, திடீரென்று இரயிலைவிட்டு இறங்கி, "நான் சில பென்சில்களை எடுத்துக்கொள்ளவேண்டும், உண்மையில், நீ ஒரு வியாபாரி, நானும் ஒரு வியாபாரிதான்" என்று சொல்லி, சில பென்சில்களை அவன் கோப்பையிலிருந்து அள்ளிக்கொண்டு, மீண்டும் இரயிலுக்குள் பிரவேசித்து, பிரயாணம் செய்தான்.

ஆறு மாதங்களுக்கு பிறகு, இந்த அதிகாரி, ஒரு பார்ட்டி (விருந்து சாலை)யில் கிண்டி ராயல் மெரிடியனில் கலந்து கொண்டான். அங்கே அந்த பிச்சைக்காரனும் நல்ல உயர்ந்த சூட் (Suit) மற்றும் டை(Tie) அணிந்தவனாக வந்திருந்தான். பிச்சைக்காரன் அதிகாரியை கண்டுணர்ந்து கொண்டான். அதிகாரியால் அவன் யார் என்று கண்டுணர முடியவில்லை.

பிச்சைக்காரனாக இருந்து, பெரிய வியாபாரியாக மாறினான். நடந்த சம்பவத்தில், தான் எப்படி இந்த உயர்ந்த நிலைக்கு வந்தேன் என்று விவரித்தான். "நீ எனக்கு தர்மம் செய்ததுமில்லாமல், எனக்கு என்னுடைய சுயமரியாதையை திரும்ப கொடுத்தீர், இன்று நான் பெரிய பிஸினஸ் மேனாக இருக்கிறேன். அன்றைக்கு சில பென்சில்களை என் கோப்பையிலிருந்து எடுத்து, என்னை உயர்ந்த மனிதனாக்கினீர்" என்றான். என்னுடைய வாழ்க்கை அந்த நாளிலிருந்து பயனுள்ள வாழ்க்கையாக மாறினது. கோப்பையை மாற்றி, வேலை செய்ய தொடங்கினேன். இப்பொழுது நான், நானாக நிற்கிறேன். உமக்கு நன்றி, என்னுடைய மதிப்பை திரும்ப எனக்கு தந்தீர். அந்த சம்பவம் என் வாழ்க்கையை மாற்றியது".

ஆம் நண்பர்களே, அந்த எக்ஸிகியூட்டிவ் போல, இயேசுவானவர் அவனுக்கு , பிச்சை கேட்டவனுக்கு, அழைப்பு அருளி (Royal calling) அவனுக்கு அற்புதம் செய்தார். என்ன அற்புதம்?

## 5. நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? (What do you want me to do for you?)

இயேசு அவனை நோக்கி : நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்? என்று ஒரு அருமையான கேள்வியை பர்திமேயுவிடம் கேட்டார். அவர் பர்திமேயுக்கு இரங்கினார். அவனை மேன்மைப்படுத்த விரும்பினார். அவருடைய இரக்கம் செயல்வடிவம் ஆனது. அந்த குருடன் : **"ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்"** என்று அழகாக தன் விருப்பத்தை ஜெபமாக உரைத்தான். இந்த நான்கு வார்த்தை ஜெபம் ஒரு உன்னதமான ஜெபம். பர்திமேயு

இறைமகன் இயேசுவிடம் பேசினான். ஒரு வேளை, முழங்கால் பணியிட்டு இந்த ஜெபத்தை சொல்லுங்கள். ஆண்டவர் இயேசு உங்களுக்கும் மனம் இரங்குவார்.

**"தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன் (எபேசியர் 3:19).**

பவுல் அப்போஸ்தலரின் ஜெபம், ஒரு ஆழமான ஜெபம். பர்திமேயு மிகவும் எளிமையாக ஜெபித்தான். **ஆண்டவராகிய இயேசுவே, நான் பார்வையடைய வேண்டும்!** நம்முடைய ஆண்டவர் இயேசு, ஜெபத்தைக் கேட்கிறவர், பதில் தருகிறார்.

இரவில் கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனமாகி, நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றார். அவன் கர்த்தரிடம் ஞானத்தைக் கேட்டான். அது அவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாக மாறினது. நான் பரிசுத்த வேதாகமத்தை என்னுடைய கல்லூரி நாட்களில் படித்தபோது, நீதிமொழிகள் 1:7 மற்றும் 9:10 வசனங்கள் என் கவனத்தை ஈர்த்தன. அருமையான வேதவசனங்கள் :

**"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்".**

**"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு".**

அருமையான நண்பர்களே, கர்த்தரிடம் ஞானத்திற்காக ஜெபியுங்கள். அதை அவர் உங்களுக்கு அருளுவார்.

## 6. நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது : (Go your way, your faith has made you well)

நீங்கள் எதிர்பார்த்து நம்பி, விசுவாசத்துடன் எதற்காக வேண்டிக் கொள்கிறீர்களோ, அதை பெறுவீர்கள். உடனே அவன் பார்வை அடைந்தான் என்று மாற்கு நற்செய்தி புத்தகம் நமக்குச் சொல்லுகிறது. ஆம், விசுவாசித்தால் பார்வை அடைவீர்கள். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். தேவ

மகிமையை காண்பீர்கள். உன் ஜெபத்திற்கு பதில் உண்டு. உன்னுடைய விசுவாசம் உனக்கு வெற்றியை கொடுக்கும். ஆம் பிரிமானவர்களே! தேவன் இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர். அவர் உங்களை உயிர்ப்பித்து இரட்சிப்பார்.

**இயேசு சொன்னார் :**

**"அவர்அவளைப் பார்த்து : மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்றார்" (மாற்கு 5:34).**

**பவுல் அப்போஸ்தலன் சொன்னார் :**

**"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (the gift of God) (எபேசியர் 2:8).**

அருமையான எனதருமை உடன் பிறப்புகளே, தமிழ் மக்களே! என்னுடைய நல்ல செய்தியை நிறைவு செய்கின்றேன். இறைவன் இயேசுவிடம் ஜெபியுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

## 7. ஜெபம் : (Prayer)

**எங்களை நேசிக்கிற பிதாவே, இயேசுவின் வழியே உம்மிடம் ஜெபத்திலே வருகிறேன். தேவகுமாரன் இயேசுவே, எனக்கு இரங்கும். என்னுடைய பாவங்களை மன்னியும். ஆண்டவராகிய இயேசுவே, என் விளக்கை ஏற்றுவீராக. என் கண்களிலே வெளிச்சத்தை தாரும். என்னுடைய மனக்கண்களை பிரகாசியும். பர்திமேயு பார்வடைந்து, இயேசுவே உம்மை பின்பற்றி சீஷனானதுபோல, நான் உம்மை பின்பற்றுகிற சீஷன். என் வழிகளை செவ்வையாக்கும். என் வாழ்விலே வெற்றியை தருவீராக. என்னை பரிபூரணமாக குணமாக்கும். உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்.**

**மேலும் விவரங்களுக்கு: For further details, contact:**

Prayer line : 7305887363 Whatsapp : 9445113726

E-mail : peterchandran1980@gmail.com

Website : www.thelivinggodministries.org